©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

அசாதாரணம் அதிகாரப்பூர்வமாகவெளியிடப்பட்டது

எண். 341 ] சென்னை, திங்கள், அக்டோபர் 23, 2017

ஐப்பசி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி–II – பிரிவு 2

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

## அரசின் அறிவிக்கைகள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன் கீழ் ஏற்றுமதிக்காக ஒரு பதிவுபெற்ற வழங்குநரால் ஒரு பதிவுபெற்ற பெறுநருக்கு மாநிலத்திற்குள் வழங்கப்படும் வரிவிதிப்பிற்குட்பட்ட சரக்குகள் மீதான மாநில வரி

*[அ.ஆ.நிலை எண். 146 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) , 23 அக்டோபர் 2017,*

*ஐப்பசி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/868(ஈ)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 –ன் (தமிழ்நாடு சட்டம் 2017–ன் 19–ல்) இதன்பிறகு இவ்வறிவிக்கையில் “கூறப்பட்ட சட்டம்'' என குறிப்பிடப்படும்) பிரிவு 11–ன் உட்பிரிவு (1)–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி தமிழ்நாடு ஆளுநரால், குழுவின்பரிந்துரைகளின் படி, அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்கு அவசியமானது என மனநிறைவடைந்து, பதிவுபெற்ற வழங்குநரால், மாநிலத்திற்குள்ளே வழங்குப்படும் வரி விதிக்கத்தக்க சரக்குகள் (இதன்பிறகு இவ்வறிவிக்கையில் “கூறப்பட்ட சரக்குகள்'' என குறிப்பிடப்படும்), ஏற்றுமதியின் பொருட்டு பதிவு பெற்ற பெறுநருக்கு, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு–9ன் கீழ் விதிக்கப்பட வேண்டிய மாநிலவரியில் இருந்து, 0.05 சதவீதத்துக்கு அதிகமாக கணக்கிடப்பட்ட தொகையானது, பின்தொடரும் வரையறைகள் பூர்த்தி செய்வதற்குட்பட்டு, இதன்மூலம் விலக்களிக்கப்படுகிறது, அதாவது:–

(i) ஒரு வரி விலைப்பட்டியல் மேல் பதிவுபெற்ற பெறுநருக்கு சரக்குகளை பதிவு பெற்ற வழங்குநர் வழங்க வேண்டும்;

(ii) பதிவுபெற்ற வழங்குநரால் ஒரு விலைப்பட்டியல் வழங்கிய தேதியிலிருந்து தொன்னூறு நாட்கள் காலத்திற்குள் கூறப்பட்ட சரக்குகளை பதிவு செய்த பெறுநர் ஏற்றுமதி செய்ய வேண்டும்;

(iii) கப்பலேற்றப் பட்டியல் அல்லது ஏற்றுமதிப் பட்டியலில் கூறப்பட்ட சரக்குகள் தொடர்பான பதிவு பெற்ற வழங்குநரால் வழங்கப்பட்ட வரி விலைப்பட்டியல் எண் மற்றும் பதிவு பெற்ற வழங்குநரின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண்ணிணை பதிவு பெற்ற பெறுநர் நேர்விற்கேற்ப குறிப்பிட வேண்டும்;

(iv)வர்த்தக துறையினால் பதிவு பெற்ற பெறுநர்அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அல்லதுபொருட்களின் வாரியத்திலோ பதிவு பெற்ற பெறுநர் பதிவு செய்திருக்க வேண்டும்;

(v) சலுகை வீதத்தில் சரக்குகளை வாங்குவதற்காக பதிவு பெற்ற பெறுநர் பதிவு பெற்ற வழங்குநரிடமிருந்து பதிவு பெற்ற பெறுபவர் உத்தரவினை கொடுக்க வேண்டும் மேலும் பதிவுபெற்ற வழங்குநரின் செயல் எல்லை வரி அலுவலரிடம் அதனுடைய நகலினையும் கொடுக்க வேண்டும்;

(vi) பதிவுபெற்ற வழங்குநரின் இடத்திலிருந்து கூறப்பட்ட சரக்குகளை பதிவு பெற்ற பெறுநர் இடம் பெயர்த்து செல்வாார்–

(அ) கூறப்பட்ட சரக்குகள் எங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறதோ நேரடியாக அந்த துறைமுகத்திற்கு, உள்நாட்டுசரக்கு பெட்டக கிடங்கிற்கு, விமான நிலையத்திற்கு அல்லது நில சுங்கவரி நிலையத்திற்கு அல்லது

(ஆ) கூறப்பட்ட சரக்குகள் எங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறதோ அந்த துறைமுகம் , உள்நாட்டு சரக்கு பெட்டக கிடங்கு, விமான நிலையம் அல்லது நில சுங்கவரி நிலையத்திற்கு எங்கிருந்து கூறப்பட்ட சரக்குகள் இடம்பெயர்க்கப் படுகிறதோ நேரிடையாக அந்த பதிவு பெற்ற சேமிப்பு கிடங்கிற்கு;

(vii) பதிவு பெற்ற பெறுநர் பல்வேறு வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களை திரட்ட விரும்பி மேலும் அதன் பிறகு ஏற்றுமதி செய்தால், ஒவ்வொரு பதிவு பெற்ற வழங்குநரிடமிருந்து சரக்குகள் பதிவு பெற்ற சேமிப்பு கிடங்கிற்கு இடம் பெயர்த்தப்பட்டு மற்றும் ஒன்று சேர்த்தலுக்கு பிறகு, எங்கிருந்து அவை ஏற்றுமதி செய்யபப்பட இருக்கிறதோ அந்த துறைமுகம், உள்நாட்டு சரக்கு பெட்டக கிடங்கு, விமான நிலையம் அல்லது நில சுங்கவரி நிலையத்திற்கு சரக்குகளை பதிவு பெற்ற பெறுநர் இடம் பெயர்த்துவார்;

(viii) ஒருவேளை வரையறை (vii)-ல் குறிப்பிடப்பட்ட ஒரு சூழ்நிலையில், பதிவுபெற்ற பெறுநர் சரக்குகளைப் பெற்று கொண்டமைக்கான வரி விலைப்பட்டியல் மீது மேல்சான்றிடப்பட வேண்டும் மேலும் சேமிப்பு கிடங்கு இயக்குபவரிடமிருந்து பதிவு பெற்ற சேமிப்பு கிடங்கிற்கு சரக்குகள் பெற்றமைக்கான ஒப்புதலை மேலும் பெற வேண்டும் மேலும் அத்தகைய வழங்குநருக்கான செயல் எல்லைவரிஅலுவலருக்கும் அதே போல் பதிவு பெற்ற வழங்குநருக்கும் மேல்சான்றிடப்பட்ட வரி விலைப்பட்டியல் மற்றும் சேமிப்பு கிடங்கு இயக்குபவரது ஒப்புதலையும் அளிக்க வேண்டும்,;மற்றும்

(ix) சரக்குகள் ஏற்றுமதி செய்யப்படும் போது, பதிவு பெற்ற பெறுநரால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண் (GSTIN) விவரங்கள் உள்ளடங்கிய கப்பல் பட்டியல் நகல் அல்லது ஏற்றுமதிக்கான பட்டியல் மேலும் அத்தகைய வழங்குநருக்கான செயல் எல்லை அலுவலருக்கும் , அதே போல் பதிவு பெற்ற வழங்குநருக்கும் தாக்கல் செய்யப்பட்ட ஏற்றுமதி அறிக்கைக்கான ஆதாரமாக பொது ஏற்றுமதி கொள்கை விளக்க அறிவிப்புடன், பதிவு பெற்ற வழங்குநரின் வரி விலைப்பட்டியலும் அளிக்கப்பட வேண்டும்.

**2.** வரி விலைப்பட்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து தொன்னூறு நாட்கள் காலத்திற்குள் கூறப்பட்ட சரக்குகளை பதிவு பெற்ற பெறுநரால் ஏற்றுமதி செய்யத்தவறினால், பதிவு பெற்ற வழங்குநர் மேலே கூறப்பட்ட விலக்களிப்பிற்கு தகுதியற்றவராகிறார்.

முனைவர்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர் **(முகூபொ).**